தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை சார்பில் வேர்களை தேடி திட்டத்தின் கீழ் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அயலக நாடுகளில் வசிக்கும் தமிழ் மாணவர்கள் 38 பேர் கன்னியாகுமரி வந்ததையடுத்து அவர்களை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் நேரில் சென்று வரவேற்று கலந்துரையாடினார். உடன் மாவட்ட ஆட்சியர் அழகு மீனா , அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை இணை இயக்குநர் ரமேஷ், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் அயலகத் தமிழர் நல வாரிய உறுப்பினர் துபாய் மிரான் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மணிப்பூரில் மீண்டும் வன்முறை:

# பிரதமர் மோடி மன்னிப்பு கேட்க வேண்டும்!

## காங்கிரஸ் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜன.2- மணிப்பூர் விவகாரங்களுக்காக அம்மாநில முதல் மந்திரி பிரேன் சிங் மன்னிப்பு கேட்டிருக்கும் நிலையில், பிரதமர் மோடியும் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியின் ஊடகப் பிரிவு பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில், "பிரதமர் மோடி மணிப்பூருக்குச் சென்று அம்மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் மே 4, 2023 முதல் அவர் நாடு மற்றும் உலகம் முழுவதும் ஜெட் விமானத்தில் பயணம் செய்தபோதும் அவர் வேண்டுமென்றே அம்மாநிலத்துக்கு வரு வதைத் தவிர்த்தார். மணிப்பூர் மக்களால் இந்தப் புறக்கணிப்பை புரிந்து கொள்ள முடியாது" என்று பதிவிட்டுள்ளார்.

**மணிப்பூரில் குண்டுவெடிப்பு**

இந்நிலையில் மணிப்பூர் முதல்வர் மன்னிப்பு கேட்டுக் கொண்டிருக்கும் நிலையில் மீண்டும் மணிப்பூரில் குண்டு வெடித்தது.

இதனால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர்நகர் கிழக்குப் பகுதி, 131 வது வட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி தலைமையில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அசோக் நகர் கலைஞர் பொது நல மன்றத்தில் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது. உடன் பகுதி அவைத் தலைவர் மு.மணிவண்ணன், 131 வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோமதி மணிவண்ணன், 131 வது வட்டக் கழகச் செயலாளர் மு.ம.செந்தில்குமார், பகுதி துணைச் செயலாளர் புஷ்பா மற்றும் 131 வது வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னணியினர் பலர் கலந்து கொண்டனர்.

# கும்பகோணத்தில் துணை முதல்வர் பிறந்தநாள் - விளையாட்டுப் போட்டி!

## அமைச்சர் கோவி.செழியன், மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. தொடங்கி வைத்தனர்!

தஞ்சாவூர் ஜன.2- கும்பகோணத்தில் வடக்கு மாவட்ட திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் உதயநிதி ஸ்டாலின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு ஒற்றையர் மற்றும் இரட்டையர் இறகு பந்து போட்டியை மாநிலங்களவை உறுப்பினர் தொடங்கி வைத்தார்.

கும்பகோணத்தில் வடக்கு மாவட்ட திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் உதயநிதி ஸ்டாலின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு ஒற்றையர் மற்றும் இரட்டையர் இறகு பந்து போட்டி ஏ. ஆர்.ஆர். மெட்ரிக் மேல் நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இந்த போட்டியை மாநிலங்களவை உறுப்பினரும் மாவட்ட செயலாளருமான சு.கல்யாணசுந்தரம், உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி செழியன் துவக்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் முன்னாள் மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, மாநகராட்சி துணை மேயர் சு.ப.தமிழழகன், மாவட்ட அவைத் தலைவர் க.நசீர் முகமது, ஒன்றிய செயலாளர்கள் உள்ளூர் டி.கணேசன், எஸ். கே.முத்துச் செல்வம், கூகூர் சி.அம்பிகாபதி, கோ.க.அண்ணாதுரை, இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் ஜி.கே.எம்.ராஜா, மாவட்ட விளையாட்டு அணி அமைப்பாளர்கள் வீ.சிவகுமார், துணை அமைப்பாளர்கள் வசந்தராஜ், சுவாமிநாதன், ஸ்டாலின், ஸ்ரீராம், சங்கர், மற்றும் நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். இந்த போட்டியில் 10 வயது முதல் 19 வயது வரை ஐந்து பிரிவுகளாக நடைபெற்றன.

இதில் தஞ்சை மாவட்டத்திலிருந்து 300-க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். போட்டியில் வெற்றி பெறும் நபர்களுக்கு முதல் பரிசாக ரூ.3000, இரண்டாம் பரிசாக ரூ.2000, மூன்றாம் பரிசாக ரூ.1000 வழங்கப்பட்டது. கலந்து கொண்ட அனைவருக்கும் ஆறுதல் பரிசும் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

# நீலகிரி மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் அறிவிப்பு!

உதகை, ஜன.2- நீலகிரி மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் ஜன.4 அன்று நடைபெறுகிறது என்று மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் (4.01.2025 - சனிக்கிழமை) அன்று காலை 11.00 மணி அளவில் மாவட்ட கழக அவை தலைவர் கே. போஜன் தலைமையில், கழக தேர்தல் பணி செயலாளர், அரசு தலைமை கொறடா கா.ராமசந்திரன், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் தென்றல் செல்வராஜ் (உதகை), பி.ஆர்.பரமேஸ்குமார் (கூடலூர்) மற்றும் அ.திராவிடமணி (குன்னூர்) ஆகியோர் முன்னிலையில் மாவட்ட கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமை கழக நிர்வாகிகள், தலைமை கழக செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், நகரஒன்றியபேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்க அன்புடன் வேண்டுகிறேன்.

பொருள் : 1. தலைமை கழக அறிவிப்பின்படி, 8.1.2025ம் தேதிக்குள் வாக்குச்சாவடி குழுவினர் (BLC) பட்டியலை நிறைவு செய்தல் குறித்து. 2. மாவட்டத்திலுள்ள அனைத்து நகரஒன்றியபேரூர்கிளை கழகங்களிலும், தமிழர் திருநாள் பொங்கல் விழா நிகழ்ச்சிகள் சிறப்புடன் நடத்துவது குறித்து. 3. கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு பா.மு.முபாரக் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

கேரள மாநிலம் - புனலூர் தொகுதி -

# அம்பநாடு எஸ்டேட் முதல் தென்காசி வரை அரசுப் பேருந்துகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் இன்று தொடங்கி வைக்கிறார்!

கொல்லம், ஜன. 2 - கேரள மாநிலம் கொல்லம் மாவட்டம் புனலூர் தொகுதி அம்பநாடு எஸ்டேட் முதல் தென்காசி வரை தமிழக அரசு சார்பில் பேருந்துகள் இயக்கம் அமைச்சர் சா.சி.சிவசங்கர் இன்று தொடங்கி வைக்கிறார் என மாநில திமுக அமைப்பாளர் கே.ஆர். முருகேசன் அறிக்கை விடுத்துள்ளார்.

அது வருமாறு:

கேரள மாநிலம் முழுவதும் பல மாவட்டங்களிலும் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர் குறிப்பாக தமிழ் மக்கள் அதிகம் வாழும் மாவட்டங்களில் கொல்லம் மாவட்டம் ஒன்றாகும். குறிப்பாக கொல்லம் மாவட்டம் புனலூர் தொகுதியில் அம்பநாடு, ஆரியநாடு, ஆரியங்காவு என்று பனிரெண்டு எஸ்டேட் உள்ளது. இந்த எஸ்டேட்டுகளில் புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தொகுதியை பூர்வமாக கொண்ட இலங்கையில் இருந்து வந்து குடியேறிய தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர் சுமார் முப்பத்தி ஐந்து சதவீதம் பேர் தமிழர்கள் வாழ்ந்து வரும் தொகுதியாக புனலூர் விளங்கி வருகிறது இந்த தமிழக மக்கள் அனைவரும் தமிழக முதல்வர் தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் செயல்பாடுகளால் ஈர்க்கப்பட்டு தமிழக முதல்வர் அவர்களை கொண்டாடி வருகின்றனர்.

அண்மையில் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு கேரள மாநில திமுக சார்பில் ஆரியங்காவு பகுதியில் பிறந்தநாள் விழா கேரள மாநில திமுக அமைப்பாளர் கே.ஆர். முருகேசன் தலைமையில் தென்காசி தெற்கு மாவட்ட கழக முன்னாள் செயலாளர் சிவ.பத்மநாபன் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

அந்த நிகழ்ச்சியில் கேரள மாநில திமுக அமைப்பாளர் கே.ஆர். முருகேசன், தென்காசி தெற்கு மாவட்ட கழக முன்னாள் செயலாளர் சிவ.பத்மநாபன் ஆகியோரிடம் அம்பநாடு, ஆரியநாடு உள்ளிட்ட பனிரெண்டு எஸ்டேட்டில் வாழும் தமிழ் மக்கள் தங்களுக்கு அம்பநாடு எஸ்டேட் முதல் தென்காசி வரை பேருந்து வசதி செய்து கொடுத்தால் நாங்கள் அனைவரும் எங்களுக்கு தேவையான அனைத்து பொருட்களும் வாங்கி வருவதற்கு வசதியாக இருக்கும் என்று கோரிக்கை விடுத்தார்கள்.

இந்த கோரிக்கை மனு தமிழக போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி.சிவசங்கரிடம் கேரள மாநில திமுக அமைப்பாளரும் தென்காசி தெற்கு மாவட்ட கழக முன்னாள் செயலாளரும் நேரில் சென்று அளித்தோம். இந்த கோரிக்கையை ஏற்று உடனடியாக அம்பநாடு முதல் தென்காசி வரை தமிழக அரசு சார்பில் பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுத்து உத்தரவு பிறப்பித்தார்கள்.

இதன் துவக்க விழா கேரள மாநிலம் கொல்லம் மாவட்டம் புனலூர் தொகுதி அம்பநாடு எஸ்டேட்டில் இன்று (2.1.2025-வியாழக்கிழமை) மாலை 5மணியளவில் கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் தலைமையில் தென்காசி தெற்கு மாவட்ட கழக முன்னாள் செயலாளர் சிவ.பத்மநாபன் முன்னிலையில் தமிழக அரசின் போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடி அசைத்து துவங்கி வைக்கிறார்.

இந்த நிகழ்ச்சியில் கேரள மாநில திமுக இளைஞர் அணி அமைப்பாளர் பிரின்ஸ், மாநில திமுக இளைஞர் அணி துணை அமைப்பாளர் விபின் முருகேசன், ஹரிகுமார் மற்றும் சிற்றார் ரவிச்சந்திரன், துரை பேச்சிமுத்து, மாவட்ட கழக செயலாளர்கள் ரெஜிராஜ்,மாம்பழத்துறை சலீம் ஸ்டீபன்,ஆதவன், சதாசிவம், ஷாலினி, அஜ்மல், ராஜேஷ், ஷாம்லால், லால்ஜி, கீதா,அச்சு பிலால், நெவின், பிரின்ஸிஅன்னா மற்றும் அனைத்து அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர் இந்த நிகழ்ச்சியில் கேரள மாநிலம் முழுவதும் உள்ள கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கேரள மாநில திமுக அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# வைக்கத்திலிருந்து வேளாங்கண்ணிக்கு புதிய வழித்தடப் பேருந்து!

## அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் தகவல்!

சென்னை, ஜன.2- அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலம் வைக்கத்திலிருந்து வேளாங்கண்ணிக்கு புதிய வழித்தடப் பேருந்து இயக்கத்தை போக்குவரத்துத் துறை அமைச்சர் தொடங்கி வைத்தார் என அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

12-12-2024 அன்று கேரள மாநிலம் வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழாவில் தந்தை பெரியார் நினைவகம் மற்றும் பெரியார் நூலகம் திறப்பு விழா ஆகியவற்றை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்த போது கோட்டயம் பாராளுமன்ற உறுப்பினர் கே.பிரான்சிஸ் ஜார்ஜ் அளித்த கோரிக்கைகளின் அடிப்படையில் முதலமைச்சர் அவர்களின் உத்தரவுபடி தமிழ்நாடு போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், கேரளா மாநில போக்குவரத்துத் துறை அமைச்சர் கே.பி.கணேஷ் குமார் மற்றும் கோட்டயம் பாராளுமன்ற உறுப்பினர் கே.பிரான்சிஸ் ஜார்ஜ் அவர்களின் முன்னிலையில் நேற்று (01-01-2025) 17.00 மணிக்கு கேரளா மாநிலம் வைக்கத்திலிருந்து வேளாங்கண்ணிக்கு புதிய வழித்தடம் இயக்கப்படுகிறது.

சிறப்பு விருந்தினராக தலைவர், மற்றும் நிர்வாக இயக்குநர், கேரள மாநில போக்குவரத்து கழகம், திருமதி சி.கே. ஆஷா, வைக்கம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி. பிரீதா ராஜேஷ், தலைவர் வைக்கம் நகராட்சி எஸ்.ஹரிதாசன் நாயர், எதிர்கட்சி தலைவர், வைக்கம் நகராட்சி, ஜி.பி. பிரதீப் குமார், தலைமை நிர்வாக இயக்குநர், கேரள போக்குவரத்துக் கழகம், ஆர். மோகன், மேலாண் இயக்குநர், தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

புதிய பேருந்து வழிதடம் (வழி வைக்கம், கோட்டயம், சங்கனாச்சேரி, புனலூர், தென்மலை, செங்கோட்டை தென்காசி, இராஜபாளையம், மதுரை புதுக்கோட்டை, திருவாரூர், நாகப்பட்டிணம்) வழியாக தினசரி இயக்கப்படுகிறது.

வைக்கம் - வேளாங்கண்ணி புறப்படும் நேரம் 16.00 மணி

வேளாங்கண்ணி - வைக்கம் புறப்படும் நேரம் 16:30 மணி

மேற்படி புதிய வழித்தட பேருந்து வசதியினை பயணிகள் அனைவரும் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்**
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி | 145 | 1 |
| 2 | மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி - 2 | 196 | 1 |

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in

செ.ம.தொ.இ/5747/ஒப்பந்தப்புள்ளி/2024

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு புத்தாண்டு தினமான ஜனவரி 1 அன்று 17வது வட்டம் வடபெரும்பாக்கம் பகுதியில் உள்ள சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. முன்னதாக 40 அடி உயர கொடி கம்பத்தில் இரு வண்ண கழகக் கொடியை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்றி வைத்து, நலத்திட்ட உதவிகளை வழங்கினார். 17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மூர்த்தி, பாலாஜி, சிவகுமார், சண்முக பிரியன் ,மைக்கேல், செந்தில், கார்த்திக், தினேஷ், வக்கீல் தளபதி, பூபாலன், திவாகர், சசிகுமார், மாதவன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

# 172 'அ' வட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## எஸ்.ஆர்.செந்தில் - கழகத்தினர் பங்கேற்பு!

சென்னை, ஜன. 2 - சென்னை தெற்கு மாவட்டம் - சைதை கிழக்கு பகுதி 172 'அ' வட்டக் கழக கூட்டம் 31.12.2024 செவ்வாய்க்கிழமை மாலை 7.00மணி அளவில் நம்பர் 10/ 8 நேரு நகர் 2வது மெயின் ரோட்டில் உள்ள வட்டக் கழக அலுவலகத்தில் வட்ட அவைத் தலைவர் தா.கோ.வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இன்று (2.01.2024) காலை 9.00மணிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் பஜார் வீதியில் உள்ள சென்னை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் கலைஞர் திறன் மேம்பாட்டு மையம் திறப்பு விழா.

ஜனவரி மாதம் 04.01.2025 தேதி மாலை 4 மணிக்கு நந்தனம் ஒய்.எம்.சி.திடலில் அமைச்சர் மா. சுப்பிரமணியன் எழுதிய கின்னஸ் கலைஞர் நூல் வெளியீட்டு விழா

_தமிழ் புத்தாண்டு பொங்கல் விழா முன்னிட்டு ஜனவரி மாதம் 06.01.2025 தேதி அன்று வட்டம் முழுவதும் மகளிர் கோலம் போடும் நிகழ்ச்சி

ஆகியவை குறித்து பகுதி செயலாளர் 13 வது மண்டல குழு தலைவர் இரா. துரைராஜ் ஆலோசனைபடி வட்டச் செயலாளர் எஸ். ஆர்.செந்தில் ஆலோசனை வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்டப் பிரதிநிதி வே.ரமேஷ்குமார், வட்டக் கழத்தினர் அ.சக்திவேல், எம்.நாராயணமூர்த்தி, ஆர்.சீனிவாசன், கே.கே.மோகன், பி.பிரகாஷ், ஏ.சுரேஷ், கே.சுகுமார், ஆர்.ரவீந்தர் எஸ். ராஜாராம், ராஜாங்கம் தங்கமணி, ஜெ.வாசுதேவன், வி.மாரிமுத்து, கே.முனுசாமி, லிங்கப்பன், துரைப்பாண்டி, ஸ்ரீதர், நாராயணண், சந்திரா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

10-ம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு: 07-06-1942 இறப்பு: 02-01-2015

திருமதி.
M.சகுந்தலா அம்மாள்

என்றென்றும் உங்கள் நீங்கா நினைவுகளுடன்...

மகள் : M.ஜெயந்தி சக்திசேகரன் M.Sc.,
மகன்கள் : M.உபேந்திரன் M.E.,
வழக்கறிஞர் M.ஸ்ரீதரன் M.A. L.L.B., M.C.,
(சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர், 140-வது வார்டு மாமன்ற உறுப்பினர், சென்னை மாநகராட்சி)
மற்றும் குடும்பத்தினர்.